## ஏக்கருக்கு ஒரு லட்சம்.. பந்தல் காய்கறி.. பக்காவான வருமானம்…

## 25.11.2013

## குதூகலமூட்டும் குறும்புடலை!




வேலையாட்கள் குறைவாகத்தான் தேவைப்பட வேண்டும். அதிக வேலை வைக்கக் கூடாது நல்ல வருமானமும் கிடைக்க வேண்டும்.

நீங்கள் இப்படியெல்லாம் கணக்குப் போட்டு விவசாயம் செய்பவராக இருந்தால், உங்களுக்கான விவசாயம்.. பந்தல் காய்கறிகளாகத்தான் இருக்க முடியும். ஆம், இந்த சூட்சமத்தைத் தெரிந்து வைத்திருக்கும் விவசாயிகள் பலரும், தொடர்ந்து பந்தல் வகை காய்கறிகளைத்தான் சாகுபடி செய்து வருகிறார்கள்.. திருவண்ணாமலை, வேங்கிக்கால், சுரேஷ்குமார்! இவர், குறும்புடலை சாகுபடியால், குதூகல வருமானம் பார்த்துக் கொண்டிருப்பவர்!

திருவண்ணாமலை அவலூர்பேட்டை சாலையில், பதினெட்டாவது கிலோ மீட்டரில் வருகிறது, மங்கலம். இங்கிருந்து இடதுபுறமாக செல்லும் சாலையில், ஏழாவது கிலோ மீட்டரில் ஆர்ப்பாக்கம். இங்கேதான் இருக்கிறது.. சுரேஷ்குமாரின் தோட்டம். நெல், கரும்பு, நிலக்கடலை .. என பல வகைப் பயிர்களோடு, குறும்புடலையும் சேர்த்து பயிர் செய்திருக்கிறார். பிறந்து, வளர்ந்தது எல்லாமே திருவண்ணாமலையில்தான். டிப்ளமோ இன்ஜினீயரிங் படித்தேன். வேலை கிடைக்காததால், நண்பர்களுடன் சேர்ந்து, அரிசி வியாபாரம் செய்தேன். மூட்டை கணக்கில் நெல் வாங்கி, அரைத்து விற்போம். ஆரம்பத்தில் நல்ல லாபம் கிடைத்தது. ஆனால், ஒரு கட்டத்தில் பணத்தை வசூல் செய்வதில் தொய்வு வந்துவிட்டது. பல பேர் திருப்பிக் கொடுக்காமல் போனதால், பெரிய நஷ்டம். அதனால்.. அப்பா வாங்கிப் போட்டிருந்து நிலத்தில் விவசாயத்தைப் பார்ப்பதற்கு வந்தேன். எங்க பாட்டி மூலமாக, சின்ன வயதில் இருந்தே எனக்கு விவசாயம் அறிமுகம்தான். அந்த தைரியத்தில் முதல் போகத்திலேயே கரும்பு போட்டேன். ஏக்கருக்கு 40 டன் மகசூல் கிடைத்தது. செலவு போக ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாயைத்தான் லாபமாக பார்க்க முடிந்தது. இந்த லாபத்திற்கு விவசாயம் செய்தால்..

கட்டுபடியாகாது என்று யோசிக்க ஆரம்பித்தேன். ஆட்கள் தேவையைக் குறைத்த பந்தல்! நல்ல லாபம் கிடைப்பதற்காக எதைப் பயிரிடலாம் என்ற தேடலில் இருந்தேன். அப்போது ஒரு நாள், நண்பர் மூலமாக 'பசுமை விகடன்' அறிமுகமானது. தொடர்ச்சியாக படிக்க ஆரம்பித்ததில்.. 'காய்கறி சாகுபடி

செய்தால் நல்ல வருமானம் வரும் என்று தெரிந்து கொண்டு.. 40 சென்டில் சுரைக்காய் போட்டேன். செலவு போக 40 ஆயிரம் கிடைத்தது. பிறகு… 3 ஏக்கரில் வெண்டை, கத்திரி, மிளகாய் என்று சாகுபடியில் இறங்கினேன். நல்ல வருமானம். ஆனால், வேலையாட்கள் அதிகமாக தேவைப்பட்டார்கள். சிலரிடம் யோசனை கேட்ட போதுதான், பந்தல் காய்கறியை முயற்சி செய்ய சொன்னார்கள். பாகல், பீர்க்கன், புடலை மூன்றையும் தனித்தனியாக சாகுபடி செய்தேன். ஒரு ஏக்கரில் 15 டன் பாகல், 18 டன் பீர்க்கன், 23 டன் புடலை என்ற கணக்கில் மகசூல் கிடைத்தது. மூன்றிலும் புடலை சாகுபடிதான் வசதியாக இருந்தது. அதனால், குறும்புடலையை மட்டும் சாகுபடி செய்ய ஆரம்பித்தேன் என்றார்.

**இயற்கைக்கு மாற்றிய பசுமை விகடன்!**

மொத்தம் 12 ஏக்கர் நிலமிருக்கு. அதில் 9 ஏக்கரில் நெல், 3 ஏக்கரில் குறும்புடலை இருக்கு. அரம்பத்தில் முழுக்க முழுக்க ரசாயன உரங்களையும், பூச்சிக் கொல்லிகளையும் தான் பயன்படுத்தினேன். 'பசுமை விகடன்' 'கேத்தனூர்' பழனிச்சாமி இரண்டு பேரும் தந்த தைரியத்தில்… இயற்கை விவசாயத்தில் கால் வைத்தேன். கோழி எரு, மாட்டு எரு, சூடோமோனஸ், பஞ்சகவ்யா, ஜீவாமிர்தம் என்று கொஞ்சம் கொஞ்சமாக இயற்கை இடுபொருட்களைப் பயன்படுத்துகிறேன். இன்னும் கொஞ்சம் நாளில் முழுமையாக இயற்கை விவசாயத்திற்கு மாறிவிடுவேன் என்றார்.

**10 மாத வயது!**

குறும்புடலையின் சாகுபடி காலம் 10 மாதங்கள். இதற்கு ஆடிப்பட்டம் ஏற்றது. செம்மண் கலந்த, மணற்பாங்கான பூமியில் நன்கு விளையும். ஒரு ஏக்கர் சாகுபடி நிலத்தில் ஒரு டிப்பர் மாட்டு எரு, தலா அரை டிப்பர் ஆட்டு எரு மற்றும் கோழி எரு ஆகியவற்றைக் கலந்து கொட்டி கலைத்து.. மண் பொல பொலப்பாக மாறும் அளவுக்கு மூன்று சால் உழவு செய்ய வேண்டும். பிறகு, 12 அடி நீளம் கொண்ட மூங்கிலை, எட்டு அடி இடைவெளியில், ஒன்றரையடி ஆழத்தில் நட்டு, தரையில் இருந்து ஐந்தடி உயரதில் 'ஸ்டே' கம்பியில் இழுத்துக் கட்டிக் கொள்ள வேண்டும். இந்தக் கம்பிகளுக்குகிடையில் அரையடி இடைவெளியில், தடிமனான 'நைலான் ஒயர்'களால் பின்னி, பந்தல் தயார் செய்ய வேண்டும். இந்த முறையில் பந்தல் அமைக்க ஏக்கருக்கு 800 மூங்கில், 120 கிலோ ஸ்டே கம்பி, 35 கிலோ நைலான் ஒயர் தேவைப்படும். பந்தலை ஐந்தாண்டுகள் வரை பயன்படுத்தலாம்.

**ஏக்கருக்கு 600 கிராம் விதை!**

வரிசைக்கு வரிசை 16 அடி இடைவெளியும் (ஒரு மூங்கில் தூண் விட்டு, ஒரு மூங்கில் தூண் அருகில்), செடிக்கு செடி இரண்டு அடி இடைவெளியும் கொடுத்துச் சொட்டு நீர்க் குழாய்களை அமைத்துக் கொள்ள வேண்டும். அரைமணி நேரத்திற்கு பாசனம் செய்து நிலத்தை ஈரமாக்கி, 2 அடி இடைவெளியில் குத்துக்கு ஒரு புடலை விதை வீதம் நடவு செய்ய வேண்டும். ஒரு ஏக்கர் நிலத்தில், ஆயிரத்து 200 விதைகளை நடவு செய்யலாம். (ஏக்கருக்கு 600 கிராம் விதை தேவைப்படும்). நடவு செய்யும் போதே தனியாக நாற்று உற்பத்தித் தட்டில் 100 நாற்றுகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

**இடை உழவுக்கு மினி டிராக்டர்!**

நடவு செய்த 5 முதல் 7 நாட்களில் முளைப்பு எடுத்து விடும். சரியாக முளைக்காத இடங்களில், தனியாக உற்பத்தி செய்திருக்கும் நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். 6 கிலோ கடலைப் பிண்ணாக்கை, 60 லிட்டர் தண்ணீரில் ஒர் இரவு முழுவதும் ஊற வைத்து, 15-ம் நாளில் செடிக்கு 50 மில்லி வீதம் ஊற்ற வேண்டும். 20-ம் நாள் முதல் மாதம் ஒரு முறை வீதம், மூன்று மாதங்களுக்கு… செடிகளைச் சுற்றிலும் கைகள் மூலமாகவும், இடைவெளிப் பகுதிகளில் மினி டிராக்டர் மூலமாகவும் களைகளை அகற்ற வேண்டும். அதற்கு மேல்,

கொடியானது பந்தலில் அடர்ந்து மூடிக்கொள்வதால், களை எடுக்க வேண்டியிருக்காது.
ஊட்டம் கொடுக்கும் கோழி எரு!

மண்ணின் தன்மையைப் பொருத்துப் பாசனம் செய்தால் போதுமானது. 20-ம் நாள் முதல் 15 நாட்களுக்கு ஒரு தடவை பஞ்சகவ்யா (ஏக்கருக்கு 3 லிட்டர்) அல்லது ஜீவாமிர்த கரைசல் (ஏக்கருக்கு 10 லிட்டர்) என மாற்றி மாற்றி சொட்டு நீரில் கலந்தவிட வேண்டும். 30, 60 மற்றும் 90-ம் நாளில் 19:19:19 நீரில் கரையும் உரத்தை, டேங்குக்கு 100 கிராம் வீதம் கலந்து இலை வழி உரமாகத் தெளிக்க வேண்டும். ஏக்கருக்கு 8 டேங்குகள் தேவைப்படும். 35-ம் நாளிலிருந்து 15 நாட்களுக்கு ஒரு முறை செடிக்கு ஒரு கிலோ வீதம் கோழி எருவை வேர் பகுதியில் வைக்க வேண்டும். 40-ம் நாளில் தலா 50 கிலோ வீதம் புங்கன் பிண்ணாக்கு, ஆமணக்குப் பிண்ணாக்கு, வேப்பம் பிண்ணாக்கு ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து.. ஒவ்வொரு செடிக்கும் 100 கிராம் வைக்க வேண்டும். பூச்சி, நோய் தாக்குதல் இருந்தால், இயற்கைப் பூச்சிக் கொல்லிகளைத் தெளிக்கலாம்.
20-ம் நாளில் இருந்து செடிகளில் பக்கக் கிளைகள் வரும். அதில் நேராக செல்லும் கொடியை மட்டும் ‘ ஒற்றைப்பிரி’ சணலால் கட்டி பந்தலில் ஏற்றிவிட வேண்டும். மற்றக் கிளைகளை அகற்றிவிட வேண்டும். 45-ம் நாளில் பூ வைத்து, 50 முதல் 60-ம் நாளில் பிஞ்சாக மாறி, 70-ம் நாளிலிருந்து அறுவடைக்குத் தயாராகி விடும்.
ஒரு ஏக்கரில் 34,500 கிலோ!

இங்கே விளையும் புடலையை சென்னையில் இருக்கும் கோயம்பேடு மார்க்கெட்டில்தான் விற்பனை செய்கிறேன். ஒரு நாள் விட்டு ஒரு நாள் என்று அறுவடை செய்யலாம். மொத்தம் 115 அறுவடை வரும். ஒரு ஏக்கர் நிலத்தில் அறுவடைக்கு 250 கிலோவில் இருந்து 350 கிலோ அளவுக்கு புடலங்காய் கிடைக்கிறது. சராசரியாக, 300 கிலோ என்று கணக்குப் போட்டாலே… 34,500 கிலோ மகசூல் கிடைத்துவிடும். கிலோ சராசரியாக 8 ரூபாய் என்று விற்பனையாகிறது. இதன்படி கணக்குப் போட்டால்.. இரண்டு லட்சத்து, 76 ஆயிரம் ரூபாய் வருமானம். பந்தல் செலவு, மற்ற செலவுகள் என்று எல்லா செலவுகளும் போக ஒரு லட்சம் ரூபாய் லாபம். பந்தல் செலவு முதல் வருடம் மட்டும்தான். அடுத்த நான்கு வருடத்திற்கு.. அந்த 68 ஆயிரமும் லாபத்தில் சேர்ந்துவிடும் என்றார்.
**ஒரு ஏக்கர் நிலத்தில் குறும்புடலை சாகுபடி செய்வதற்கு சுரேஷ்குமார் சொல்லும் செலவு – வரவுக் கணக்கு … (மதிப்பு ரூபாயில்)**

| விபரம் | செலவு | வரவு |
|---|---|---|
| **நிரந்தரச் செலவு** | | |
| பந்தல் | 68,000 | |
| **நடைமுறைச் செலவுகள்** | | |
| உழவு | 3,000 | |
| விதை | 1,200 | |
| நடவுக் கூலி | 140 | |
| களை எடுக்க | 9,000 | |
| இயற்கை இடுபொருட்கள் | 24,700 | |

| | | |
|---|---|---|
| தெளிப்பு உரம் | 1,000 | |
| கொடி ஏற்றிவிடுதல் | 2,000 | |
| இயற்கைப் பூச்சிக்கொல்லிகள் | 4,000 | |
| அறுவடை | 28,000 | |
| போக்குவரத்துச் செலவு | 34,500 | |
| புடலை மூலம் வரவு | | 2,76,000 |
| மொத்தம் | 1,75,540 | 2,76,000 |
| நிகரலாபம் | | 1,00,460 |

**தொடர்புக்கு**

**சுரேஷ்குமார், செல்போன் : 99447 42928**

***ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.11.13 www.vikatan.com***